**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 243/2021**

**Prosecution Witnesses : 8**

| | | | |
|---|---|---|---|
| Name | : கதிர்வேல் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**20.03.2024**

**முதல் விசாரணை**

நான் இறுதியாக தர்மபுரி வட்டாரபோக்குவரத்து அலுவலக செயலாக்கப்பிரிவில் மோ.வாகன ஆய்வாளர் நிலை1 ஆக பணியாற்றி பணி ஓய்வு பெற்று ஈரோட்டில் குடியிருந்து வருகின்றேன். நான் இதற்கு முன்பு வட்டாரபோக்குவரத்து மதுரை மையத்தில் மோ.வா.நிலை 1 ஆக பணியாற்றியபோது பெருங்குடி காவல் ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் பேரில் டிஎன் 69 ஏ எப் 6932 என்ற கனரக சரக்கு டேங்கர் வாகனத்தை அன்றைய தினமே 12.01.2016 அன்று அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த ஆய்வின் போது வாகனத்தின் கீழ்க்கண்ட சேதாரங்கள் காணப்பட்டது. வலது முன்னால் சைலன்சர் டெயில் பைப் நுனியில் வளைந்து காணப்பட்டது. வாகனத்தின் கால் தடை திறன் 68 சதவிதம் கைத்தடை இயங்கும் நிலையில் இருந்தது. இந்த விபத்து எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்றும், நான் சான்றளித்தேன். மோ.வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இதே விபத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனமான டிஎன் 84 எக்ஸ் 4405 (அடிச்சட்ட எண் எம்.வி.எல்.எம்.சி.38 ஈ.ஜே. எப்.ஜி.எப்.00278) என்ற இருசக்கர வாகனத்தை 14.01.2016 அன்று அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த ஆய்வின் போது வாகனத்தின் கீழ்க்கண்ட சேதாரங்கள் காணப்பட்டது. பின்இடதுபக்கத்தில் சேக்அப்சர் வளைந்தும் பார்ட்டம் ஐ சேதமடைந்தும் சேரிக்கார்டு வளைந்தும் இடதுபக்க முன் ஸ்கூப் சேதமாகியும் இடதுபக்க பின்புறம் பார்க்கும் கண்ணாடி சேதமாகியும் இடதுபுறம் ஓட்டுனர் புட் ரெஸ்ட் கட்டாகியும் இடதுபுறம் பின் சீட்டு கவர் சேதமாகியும் வலதுபக்க திசைகாட்டும் விளக்கு மவுண்டிங் கட்டாகியும் முன் முகப்பு விளக்கு கண்ணாடி, பெட்ரோல் டாங்க் , வலது பக்க பிரேக் பெடல் மற்றும் புகைக்குழாய் சேதமடைந்து காணப்பட்டது. வாகனம் முற்றிலும்

சேதமடைந்து இருந்ததால் கைத்தடை மற்றும் கால் தடை கண்டறிய இயலவில்லை. இந்த விபத்து எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்றும், நான் சான்றளித்தேன். மோ.வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

கனரக வாகனத்தில் சைலன்சர் வலதுமுன் சக்கரத்திற்கு முன்னால் வரும் என்றால் சரிதான். கனரக வாகனத்தில் வேறு சேதாரம் இல்லை என்றால் சரிதான். வாகனங்கள் சம்பவயிடத்தில் வைத்து ஆய்வு செய்யப்படவில்லை என்றால் சரிதான். கனரக வாகனம் சம்பவத்தன்றே ஆய்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். சம்பவயிடம் சென்றிருந்தால் விபத்திற்கான காரணத்தை சம்பவயிடம் சென்று குறிப்பாக சொல்ல முடியும் என்றால் சரிதான். ஆனால் ஸ்தல ஆய்விற்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்படவில்லை.